1983 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் எந்தெந்தப் பகுதிகளில் எப்படி நிலத்தடி நீர் இருக்கின்றது என்கின்ற குறிப்புகளை இப்பொழுது வைத்திருக்கிறோம். ஒரு விவசாயி தன்னுடைய நிலத்திலே நிலத்தடி நீரைப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பினால், ஆய்வு செய்து நிலத்தடி நீர் இருக்கிறதா என்பதைப் பார்த்துவிட்டு கிணறு தோண்டுவாரேயானால் அந்தக் கிணறு பொய்த்துப் போகாது. அவர்கள் ஏதோ மரபு வழியாக சிலரைப் பயன்படுத்தி கிணறு தோண்டுகிறார்கள். பலர் வெற்றி பெற்று விடுகின்றனர் ; சில பொய்த்துப் போகின்றன, கடன் வாங்கி பிறகு கட்ட முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அவர்களுக்கு ஒரு குறைந்த தொகையை வசூல் செய்து கொண்டு செய்யலாம். இல்லையென்று சொன்னால், இலவசம் என்று வருகின்றபொழுது எல்லோருக்குமே போய்ச் செய்ய வேண்டும். கிணறு வெட்ட விரும்புகிறார்களோ இல்லையோ எதற்கும் பார்த்து வைத்துக் கொள்ளலாமே என்ற எண்ணம் கூட வந்து விடும். எனவேதான் குறைந்த தொகையாக வசூல் செய்யலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

[முற்பகல் 10-10]

நிலத்தடி நீரின் அளவை உயர்த்துவதற்கான திட்டம்.

*வினா எண். 277—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) நமது மாநிலத்தில் நிலத்தடி நீர் குறைந்து வருவதால் எதிர்காலத்தில் குடிநீர் கிடைப்பது கடினம் என்பதை அரசு அறியுமா?

(ஆ) அக்குறையைப் போக்க ஏரிகள், குளங்கள், அமைக்க அரசிடம் Crash Programme திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) காட்டாறுகளின் குறுக்கே ஏரிகள், குளங்கள், சிறப்புச் சிறுபாசன திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்றன. அவைகளில் தேக்கப் படும் மழைநீர் நேரடிப்பாசனதுக்கு பயன்படுவதுடன், அப்பகுதியைச் சுற்றிலும் நிலத்தடி நீர் உயரவும், ஏதுவாகிறது. நிலத்தடி நீரை உயர்த்தும் நோக்குடன் சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் ஆங்காங்கே பொருத்தமான இடங்களில் குட்டைகளும் அமைக்கப்படுகின்றன. இக்குட்டைகளில் தேக்கப்படும் மழை நீரால் குட்டையைச் சுற்றிலும் உள்ள பகுதியில் நிலத்தடி நீர் உயருகிறது. கசிவு நீர் குட்டைகள் அமைக்கும் திட்டத்தினால் நில நீர் அளவு ஏற்றம் ஏற்படுகிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி எவ்வளவு குட்டைகளுக்குத் திட்டம் தீட்டப் பட்டு இருக்கின்றது. அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட் டிருக்கிறது. எதிர்காலத்தில் எவ்வளவு குட்டைகளை ஏற் படுத்துவதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலே உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் சுமார் 180 ஊராட்சி ஒன்றியங்கள் நிலநீர் அளவை விட அதிகமான அளவு பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற ஆபத்தான செய்தி தெரிந்ததற்குப் பிறகு, இப்படிப்பட்ட குட்டை களை அமைக்க விரைவு படுத்த வேண்டும் என்று அரசு முடிவெடுத் திருக்கிறது. புதிதாக தற்போது 50 ஏரிகளும், குளங்களும் அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 382 லட்சம் செலவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதோடு 14 ஏரிகளும், குளங்களும் 161 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரசுக்குத் திட்ட மதிப்பீடுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இவைகளைக் குறித்தும் நாம் இப் போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்த வேலை கள் எல்லாம் எந்தெந்த ஏஜன்சிகள் மூலம் செய்யப்படுகின்றன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, இது நிலத்தடி நீர் பிரிவைக் கவனிக்கின்ற பொதுப் பணித் துறை சார்பாகவும் வேளாண்மைப் பொறியியல் சார்பாகவும் கவனிக்கப்படுகிறது. இதற்கு முன்பு ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித் துறை சார்பாக செய்யப்பட்டு வந்திருக்கிறது. அதல்லாமல், வறட்சியால், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு புனர் நிர்மாணப் பணிகள் செய்யப்படும் திட்டத்தின்கீழும், ஒருங் கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும், அவைகளைத் தனித்தனியாக பிரித்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர் களுடைய பதிலில் காட்டாற்று தண்ணீரைத் தடுத்து, அங்கே எல்லாம் புதிய கண்மாய்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்

கப்படுகிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே பல ஆயிரக் கணக்கான கண்மாய்கள், குளங்கள், இன்றைக்கு வறண்டு இருக்கின்றன. அப்பேற்பட்ட இடங்களில், பெரிய பெரிய ராட்சத கிணறுகளை அமைத்து தண்ணீரைத் தேக்கி வைத்து, பக்கத்து கிணறுகளுக்கு கொடுக்க வேண்டும். அதோடு கால்நடைகளுக்கும், ஆடு மாடுகளுக்கும் தண்ணீர் கொடுக்க வாய்ப்பாக இருக்கும். இந்தத் திட்டத்தை ஏற்கெனவே தெரிவித்ததைப் போல 'கிரஷ்' ப்ரோகிராமாகப் போட்டு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, முதலாவது கட்டமாக முன்னாள் ஜமீன் குளங்களாக இருந்ததை இப்போது பொதுப்பணித்துறை நேரடியாக எடுத்து, கிட்டத் தட்ட 3,000 பெரிய ஏரிகள், கண்மாய்கள் போன்றவற்றை நவீனப்படுத்தி, ஆழப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 10 கோடி ரூபாய் செலவில் அரசு ஒரு திட்டத்தை எடுத்திருக்கிறது. ஏற்கெனவே பொதுப்பணித் துறையினரால், இருக்கக் கூடிய ஏரிகளையும், கண்மாய்களையும் வாய்ப்பு ஏற்படுகின்ற நிலைமைக்கேற்ப பணம் ஒதுக்கி, இன்றைக்கு அந்த ஏரிகளின் கரைகளைப் பலப்படுத்தி, ஆழப்படுத்தும் நடவடிக்கை நடந்து வருகின்றது. மூன்றாவதாக, இப்போது, ஏரி குளங்களை ஆக்கிரமிப்பு செய்து நீர் வரத்து அதிகமாக இருந்தாலும் கொள்ளளவை குறைத்து விடுகிறார்களே அதைத் தடுப்பது எப்படி என்பதை அரசு தீவிரமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்தால் மாண்புமிகு உறுப்பினர் கருதுகின்ற பல்வேறு எண்ணங்கள் திட்டங்களாக நடைமுறைப்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது.

விளவங்கோடு தாலுகா மடிச்சல் கால்வாய் திட்ட வேலைகள்.

*வினா எண் 278— திரு. டி. மணி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகாவில் மடிச்சல் கால்வாய் திட்ட வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: கேரள அரசு நெய்யாறு அணையிலிருந்து தமிழ்நாட்டிற்கு ஒப்பந்தப்படி 150 கன அடி தண்ணீர் விடும் போது இத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மடிச்சல் கால்வாய்த் திட்டம் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் இதுவரையிலும் இந்த 150